**DEPOSITION OF WITNESS.**
**(Chapter XXIII, Cr.P.C)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, BODINAYAKANUR.**

**Case No.** **STC.No.496/2023**

Deposition of **DW-2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : வேல்முருகன் | **Age** | : | 42 |
| **Father's / Husband Name** | : சுப்பையா | **Religion** | : | இந்து |
| **Village** | : தேனி | **Calling** | : | கொத்தனார் |
| **Taluk** | : தேனி | **Caste** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **07day August 2025**

புகார்தாரர் ஆஜர். எதிரி ஆஜர் . இரு தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்.

**எதிரி தரப்பு முதல் விசாரணை**

1) என் மனைவி மீது காசோலை கொடுத்து பணம் வாங்கியதாக புகார்தாரர் வழக்கு தாக்கல் செய்திருந்தார். ரூபாய் வாங்கவில்லை. புகார்தாரரை எனக்கு தெரியாது, வழக்கிற்கு வந்த பிறகு தான் எனக்கு தெரியும். நான் இன்ஜினியர் சத்யராஜ் என்பவரிடம் கொத்தனார் வேலை செய்து வருகிறேன். என் மனைவியும் அங்கு தான் வேலை செய்து வருகிறார். அவர் சித்தாள் வேலை செய்து வருகிறார் காலை 8.00 மணிக்கு வேலைக்கு சென்று விட்டு இரவு 7.00 மணிக்கு தான் வீட்டிற்கு வருவோம். 19.02.2023 ஆம் தேதி நான் பணம் வாங்கியதாக வழக்கு தாக்கல் செய்துள்ளார். நான் அந்த தேதியில் வேலை செய்தேன், தேனி அல்லி நகரத்தில் உள்ள ஒரு வீட்டில் ராகேஷ் குமார் என்பவரது வீட்டில் இன்ஜினியர் மூலமாக தான் வேலை செய்தேன்.

2) அவர் சம்பளம் பட்டுவாடா செய்வதில் நான் வவுச்சரில் கையொப்பம் செய்து கொடுத்துள்ளேன். கடந்த 19.02.2023 ஆம் தேதி என்ஜினியர் சத்யராஜ் என்பவரிடம் பணிபுரிந்து சம்பளம் வாங்கியதற்கான வர்ச்சரை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். **(19.02.2023ம் தேதி ரூபாய் 4600/- காண வவுச்சர் அசல் எ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

**புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

3) புகார்தாரர் பாண்டியன் குடியிருக்கும் வீட்டிற்கும் எனது வீட்டிற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் தெரியாது. எனக்கும், புகார் பாண்டியன்

என்பவருக்கும் சுமார் 15 வருடம் பழக்கவழக்கம் உள்ளது என்றால் சரியல்ல. அந்த பழக்கவழக்கத்தின் அடிப்படையில் தான் நான் எனது மனைவியை அழைத்துச் சென்று புகார்தாரர் பாண்டியனிடம் ரூபாய் 5 லட்சம் வாங்கிக் கொண்டு வழக்கின் காசோலையை கொடுத்தோம் என்றால் சரியல்ல. இன்ஜினியர் சத்யராஜ் என்பவரிடம் சுமார் 8 ஆண்டுகளாக நான் பணிபுரிந்து வருகிறேன். எட்டு ஆண்டுகள் அவரிடம் நான் பணிபுரிந்ததற்கு ஆதரவாக ஆவணங்களை தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் நான் என்ஜினியரிடம் கேட்டு சொல்கிறேன்.

4) எ.சா.ஆ.2 இந்த வழக்கிற்காக நான் உற்பத்தி செய்த ஆவணம் என்றால் சரியல்ல. புகார்தாரரிடம் நாங்கள் வாங்கிய கடனை மோசடி செய்ய வேண்டும் என்பதற்காக என் மனைவிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தனியாக காண்ட்ராக்ட் எடுத்து வேலை செய்து வருகிறேன் என்றும் வழக்கிற்காக இன்ஜினியர் சத்யராஜிடம் வேலை செய்வதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னாள் சரியல்ல.

Taken down before me in Open Court, and read over to the witness and admitted by the deponent to be correct.

NALLA KANNAN M

Digitally signed by NALLA KANNAN M
Date: 2025.08.07 16:47:24 +0530

**Judicial Magistrate,**
**Bodinayakanur.**